**ஒதுக்கீட்டுத் தலைப்பு - 152 – நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

I ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

II ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விபரமான அறிக்கை

## I ஆம் பகுதி

**நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை**

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| செலவுத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 282 | நீர்ப்பாசனத் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**(அ) மொத்த நிதிஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களுக்காக ஏற்பாடுசெய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 36,910,460,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 31,453,650,558 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் திணைக்களங்களின் தேறிய நிதி ஏற்பாடுகளில் சேமிப்பு ரூபா 3.574,223,811 இலிருந்து ரூபா 1,882,585,631 வரையான விச்சுடைய அளவில் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 13 சதவீதத்திற்கும் 22 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதி ஏற்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டுவருபவை | மூலதனம் | மீண்டுவருபவை | மூலதனம் | மீண்டுவருபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 152 | நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 2.032,665,000 | 26,346,970,000 | 1,958,752,121 | 22,846,659,068 | 73,912,879 | 3,500,310,932 |
| 282 | நீர்ப்பாசனத் திணைக்களம் | 1.377,375,000 | 7,153,450,000 | 1,339,780,614 | 5,308,458,755 | 37,594,386 | 1,844,991,245 |
| | மொத்தம் | 3,410,040,000 | 33,500,420,000 | 3,298,532,735 | 28,155,117,823 | 111,507,265 | 5,345,302,177 |

### (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களினால் கீழே குறிப்பிடப்பட்டவாறு ரூபா 1,358,685,798 கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பயன்பாடு தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

**நீர்ப்பாசனத் திணைக்களம்**

| அமைச்சு/ திணைக்களம் | கிடைத்த நிதி ஏற்பாடு | உள்ளபடியான செலவுகள் | சேமிப்பு/ மிகை (2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு) | சேமிப்பு தொடர்பான அவதானிப்பு சுருக்கமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| நீர்ப்பாசன மற்றும் நீரியல் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 1,257,423,868 | 1,004,406,843 | 253,017,025 | கிடைத்த முழு நிதி ஏற்பாட்டில் ரூபா 323,562,855 தொகை அல்லது 24 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 96,600,000 | 29,304,875 | 67,295,125 | |
| விவசாய அமைச்சு | 844,000 | - | 844,000 | |
| விவசாயத் திணைக்களம் | 3,817,930 | 1,411,225 | 2,406,705 | |
| மொத்தம் | 1,358,685,798 | 1,035,122,943 | 323,562,855 | |

**2.2 முற்பணக் கணக்குகள்**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரம் கீழே தரப்படுகின்றன.

| தலைப்பு | விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 152 | 15201 | 145,000,000 | 101,345,654 | 102,000,000 | 141,710,253 | 480,000,000 | 355,207,592 |
| 282 | 28201 | 9,000,000 | 7,149,432 | 4,800,000 | 8,150,085 | 42,000,000 | 29,175,683 |

**2.3 கட்டுநிதி மற்றும் பொதுவைப்புக் கணக்குகள்**

**(அ) கட்டுநிதிக் கணக்குகள்**

அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,701,105 தொகையான கட்டுநிதி செலவு மீதி ஒன்று காணப்பட்டது.

**(ஆ) பொதுவைப்புக் கணக்குகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் பொதுவைப்புக் கணக்குகளின் மீதி ரூபா 379,683,071 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு / திணைக்களம் | கணக்கு இலக்கம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 6000/0000/00/0015/0063/000 | 13,790,562 |
| நீர்பாசனத் திணைக்களம் | 6000/0000/00/0001/0022/000 | 8,183,436 |
| நீர்பாசனத் திணைக்களம் | 6000/0000/00/0015/0137/000 | 357,709,073 |
| மொத்தம் | | 379,683,071 |

## II ஆம் பகுதி

**ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விபரமான அறிக்கை**

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 152 – நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு

#### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 பெப்ரவரி 18 ஆந் திகதி அமைச்சு செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம்மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

#### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

**(அ) ஏடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணுதல்**

(i) அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 04 கணக்காய்வு ஐய வினாக்கள் மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ஒரு கணக்காய்வு ஐய வினாவிற்கு 2013 மார்ச் 13 ஆந் திகதி வரையும் பதில் சமர்ப்பக்கப்படவில்லை.

(ii) தெதுரு ஓயா, எம்பிலிபிட்டிய, பதுளை, அம்பாறை மற்றும் எலஹெர ஆகிய பிரதேசங்களில் குழாய்க்கிணறுகளை நிர்மாணித்தல், குழாய்க்கிணறுகளைத் துப்பரவு செய்தல் மற்றும் நிலநீர் ஆராய்ச்சிக்காக நீர் வளங்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளை சபைக்கு மீளளித்தல் என்பவற்றின் போது மேற்கொள்ளப்பட்ட செலவுகளுக்குரிய கொடுப்பனவு உறுதிச்சான்றுகளை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காததன் காரணமாக ரூபா 4,997,236 கூட்டு மொத்த தொகைக்குரிய 07 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்யமுடியாதிருந்தது.

(iii) மீளாய்வாண்டிற்காக நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

(i) 02 மூலதன செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 210,000 கூட்டுமொத்தமான ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 12 செலவு விடயங்களுக்காக மிகையாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 514,235,356 ஆக இருந்ததுடன் அது அச்செலவு விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 29 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சுடைய அளவில் காணப்பட்டது.

**(இ) கட்டுநிதிக் கணக்குகள்**

(i) நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு முடிவடைந்ததும் உடனடியாக பெற்றுக்கொண்ட குறித்த நோக்கத்திற்கான உப கட்டுநிதிகள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் ரூபா 19,930 தொகையான குறித்த நோக்கத்திற்கான கட்டுநிதி தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 நலம்பர் 20 ஆந் திகதிய 05/2012 ஆம் இலக்க திறைசேரி செயற்பாட்டுச் சுற்றுநிருபத்தின் 2.4 ஆம் பந்தியின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,701,105 தொகையான கட்டுநிதி மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திடம் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பொதுவைப்புக் கணக்கு**

2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 5,651,382 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குக தொடர்பான இணக்கக் கூற்று**

28201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 1,947,509 கூட்டு மொத்தமாக இருந்தது. 2013 திசெம்பர் 31 வரை அம்மீதிகளில் ரூபா 1,008,237 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

## 1.4 நல்லாட்சியும் கணக்களிதன்மையும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

அனைத்து அமைச்சு செயலாளர்கள், மாகாண சபை பிரதான செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், மாகாண உள்ளூராட்சி தலைவர்கள் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்காலத்தில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் மாவட்ட செயலகத்தினால் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.4.2 உள்ளகக் கணக்காய்வு**

நிதிப் பிரமாணம் 133 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமுல்படுத்துதல்**

திறைசேரி செயலாளரின் 2000 யூன் 12 ஆந் திகதிய ஐஏஜ/2000/1 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 01 ஆம் பந்தியின பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை கூடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் குழு இரண்டு சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் கூடியிருந்தது.

**1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டமை வருடாந்த மெய்மையாய்வுச் சபை அறிக்கையினைப் பரிசோதனை செய்த போது அவதானிக்கப்பட்டது.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | 1 ஆண்டிற்கு மேல் 3 ஆண்டுகளுக்கு குறைய | 3 ஆண்டுகளுக்கு மேல் |
| மோட்டார் வாகனம் | | | |
| தம்புள்ள இயந்திர வேலைத்தளம் | 37 | 26 | 11 |
| தம்புத்தேகம இயந்திர வேலைத்தளம் | 11 | விபரம் இல்லை | |
| இயந்திரம் | | | |
| தம்புள்ள இயந்திர வேலைத்தளம் | 01 | விபரம் இல்லை | |
| தம்புத்தேகம இயந்திர வேலைத்தளம் | 01 | விபரம் இல்லை | |
| ஏனையவை | | | |
| தம்புள்ள இயந்திர வேலைத்தளம் | 01 | விபரம் இல்லை | |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச்சபை/01 ஆம் இலக்க பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலும் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க பொது நிதிச்சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சினால் 05 மோட்டார் வாகனங்கள் முறையற்ற வகையில் 2010 ஆம் ஆண்டிலிருந்து வனசீவராசிகள் மற்றும் கமத்தொழில் அமைச்சு, தபால் அமைச்சு மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பவற்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஈ) தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 200,777,386 ஆக இருந்ததுடன் அம்மீதி ஒரு ஆண்டிற்கு குறைந்த காலப்பகுதிக்குரியதாகும்.

**1.6 செயலாற்றல்**

**பிராதன பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்**

அமைச்சு தனது குறிக்கோள்களுக்குரிய செயற்பாடுகளுக்கு முரணாகச் செயற்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் சில கீழே தரப்படுகின்றன.

(அ) பிரதான மற்றும் நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களை புனரமைப்புச் செய்வதற்காக அமைச்சிற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ரூபா 4,997,236 தொகை தெதுரு ஓயா, எம்பிலிபிட்டிய, அம்பாறை, பதுள்ள, எலஹெர ஆகிய பிரதேசங்களில் குழாய்க் கிணறுகளைப் பழுதுபார்த்தல், குழாய்க் கிணறுகளை நிர்மாணித்தல், நில நீர்களைப் பரிசோதித்தல் என்பவற்றிற்காகச் செலவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) அமைச்சின் நோக்கெல்லைக்குரியதல்லாத செயற்பாடாகிய அரசாங்கத் துறைக்கான பெரசவி கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,063,660,596 செலவு செய்யப்பட்டிருந்தது.

(இ) அமைச்சினால் நிர்வகிக்கப்படுகின்ற கொத்மலே சர்வதேச பயிற்சி நிறுவனத்திற்கு மற்றும் மஹாவெலி அதிகாரசபைக்குச் சொந்தமான மடாடுகம இயந்திர வேலைத்தளத்திற்கு முறையற்ற வகையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பதவியணியினருக்கு 2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பாடு செய்யப்படாதிருந்ததுடன் நீர்ப்பாசனத்திட்டங்களில் அவசர புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண வேலைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 18,064,771 தொகை இந்நிறுவனங்களின் மேற்பார்வைக்காகச் செலவு செய்யப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறு தரப்படுகின்றது.

| நிறுவனம் | விபரம் | தொகை |
| --- | --- | --- |
| | | ரூபா |
| கொத்மலே சர்வதேச பயிற்சி நிறுவனம் | ஊழியர் சம்பளம், மனைப் பொருட்கள் கொள்வனவு செய்தல் என்பவற்றை உள்ளடக்கிய மேற்பார்வைச் செலவுகள் | 11,786,759 |
| மடாடுகம இயந்திர வேலைத்தளம் | 2011 ஆம் ஆண்டிற்கான சம்பளம் | 3,315,509 |
| | 2012 நவம்பர் மாதத்திற்கான சம்பளம் | 2,962,503 |
| | | 18,064,771 |

(ஈ) மஹாவெலி அதிகாரசபைக்குச் சொந்தமான நிராவிய பண்ணையில் கோழிகளை வளர்ப்பதற்கான கொட்டில்களை நிர்மாணிப்பதற்காக அமைச்சினால் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 8,513,972 தொகைப் பணம் வறுமை சார் பொருளாதார மேம்பாட்டு மற்றும் சமூக அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் செலவுசெய்யப்பட்டிருந்ததுடன் அது செயற்திட்டத்தின் குறிக்கோள்களுக்கு முரணான செயற்பாடாகும்.

## 1.7 சச்சரவுத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நீர் வழங்கள் சபை, மஹாவெலி அதிகாரசபை மற்றும் பொறியியல் தொடர்பான மத்திய மதியுரைப் பணியகம் ஆகிய மூன்று நிறுவனங்களிலுள்ள உத்தியோகத்தர்களுக்காக நிறுவனத்தில் கவர்ச்சியினை ஏற்படுத்துவதனைப் போல நிறுவனத்தில் உத்தியோகத்தர்களை நிறுத்திவைப்பதற்கு வசதியற்ற சேவைகளைச் சார்ந்த உத்தியோகத்தர்களை ஊக்கிவைப்பதற்காக மாதாந்தம் ரூபா 15,000 படியினைச் செலுத்துதல் பொருத்தமானது என அமைச்சு செயலாளரினால் 2012 சனவரி 25 ஆந் திகதி IWRM/S/01 ஆம் இலக்க

கடிதத்தின் மூலம் செய்யப்பட்ட சிபார்சின்படி நீர் வழங்கள் சபையினால் மீளாய்வாண்டின் போது அதில் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களில் சிலருக்காக ரூபா 1,115,000 தொகையான ஊக்குவிப்பு படிகள் செலுத்தப்படடிருந்தன இவ்வாறான ஒரு கொடுப்பனவிற்காக நிதி அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் அவசியமானது என 2003 யூன் 02 ஆந் திகதிய PED 12 ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தின் 9.7 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அமைச்சு செயலாளர் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் நீர்த் தேக்கங்களிலும் குளங்களிலுமுள்ள சேற்று மண்ணை அகற்றும் செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.7 (அ) மற்றும் (ஆ), 2.8.2 ஆகிய வழிகாட்டிகளுக்கு முரணாக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 967,996,000 செலுத்தப்பட்டு மூன்று வழங்குனர்களிடமிருந்து 48 எக்ஸவேட்டர்கள், 12 பெகோ லோடர்கள், 02 மோட்டர் கிரேடர்கள், 14 வயிப்ரேடிங் ரோல்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவ்வாறே அக்கொள்வனவுகள் நிதி, திட்டமிடல் அமைச்சு செயலாளரினால் வழங்கப்பட்ட 2012 யூலை 07 ஆந் திகதிய நிதி அமைச்சு செயலாளரின் NPD/LS/2012/01 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 5.3 ஆம் பந்தியின் பிரகாரம் தோற்றுவிக்கப்பட்ட திட்டங்களை அமுல்படுத்தும் படையணியின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அச்சுற்றுநிருபத்தின் பிரகாரம் அக்கொள்வனவுகள் தொடர்பாக நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் மஹாவெலி அதிகாரசபை ஆகிய நிறுவனங்களுக்குச் சொந்தமாகக் காணப்பட்ட இயந்திரங்கள் தொடர்பாக கவனத்தில் கொண்டு அதற்கு மேலதிகமாகத் தேவைப்படும் இயந்திரங்களை மாத்திரம் கொள்வனவு செய்வதற்கு அல்லது கூலி அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தும் அவ்வாறான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. குளத்திலுள்ள களி மண் அகற்றப்பட்டதன் பின்னர் இவ்வியந்திரங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி அமைச்சிடம் ஒரு திட்டமும் காணப்படவில்லை அத்துடன் 02 மோட்டார் ரேடர்களும் 14 வயிப்ரேடிங் ரோலர்களும் நீர்த் தேக்கங்கள் மற்றும் குளங்களின் களி மண்களை அகற்றும் செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்படாததனால் அவ்வியந்திரங்களைக் கொள்வனவு செய்யும் தேவைப்பாடும் உருவாகியிருக்கவில்லை.

இவ்வியந்திரங்கள் இலங்கை மஹாவெலி அதிகார சபையின் மடாடுகம மற்றும் தம்புத்தேகமவில் அமைந்துள்ள இரண்டு வேலைத் தளங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தும் அவற்றை பொறுப்பேற்ற உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட அமைச்சு பதவியணியினைச் சாராத உத்தியோகத்தர்கள் என்பதனால் அப்பொறுப்பேற்றல் சச்சரவுத் தன்மைக்குரியதாக இருந்தது. ஒவ்வொரு இயந்திரத்தின் மீளாய்வாண்டிற்கான மாதாந்தக் கிரய அறிக்கை மற்றும் இயந்திரங்களின் இயக்குனர்கள் தொடர்பான விபரம் 2014 யூன் 30 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.8 மனிதவளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 15 | 08 | - |
| (ii) | ஓப்பந்த அடிப்படை | - | 01 | - | 01 |
| (iii) | மூன்றாம் நிலை | 02 | 02 | - | - |
| (iv) | இரண்டாம் நிலை | 39 | 30 | 09 | - |
| (v) | ஆரம்ப நிலை | 44 | 40 | 04 | - |
| (vi) | ஏனையவை (அமையம்/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | 01 | 04 | - | 03 |
| | மொத்தம் | 109 | 92 | 21 | 04 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- மீளாய்வாண்டின் இறுதி வரை 21 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ஆங்கீகரித்த பதவியணியினர்களின் எண்ணிக்கை 291 ஆக இருந்த போதிலும் அவை 109 ஆக கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

- 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமைச்சின் பல்வேறு பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் 806 ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார்கள் என அமைச்சின் கொடுப்பனவு பதிவேட்டின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றை அங்கீகரித்த பதவியணியினர்களுடன் ஒப்பிடுகையில் 867 சதவீதத்தினைக் கொண்டிருந்தது. இந்த ஆட்சேர்ப்பிற்காக நிதிப் பிரமாணம் 71 இன் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனிதவளங்கள்**

அமைச்சினால் முறையற்ற வகையில் கீழே குறிப்பிடப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| ஊழியர் வகை | ஊழியர் எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | காலப்பகுதி |
|---|---|---|---|
| நீர்ப்பாசன பொறியியலாளர் | 05 | நீர்ப்பாசன திணைக்களம் | குறிப்பிடப்படவில்லை |
| நீர்ப்பாசன உதவியாளர் | 01 | நீர்ப்பாசன திணைக்களம் | 2011 ஏப்ரல் முதல் |
| திட்டமிடல் வல்லுனர் | 01 | நீர்ப்பாசன திணைக்களம் | 2008 சனவரி முதல் |
| சாரதி | 08 | சுகாதார அமைச்சு | 2010-2011 |
| சாரதி | 01 | வீதி அபிவிருத்தி சபை | 2010-2011 |
| சாரதி | 01 | வீதி அபிவிருத்தி சபை | 2011 |
| வேலையாளர் | 03 | சுகாதார அமைச்சு | 2010-2011 |

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 228 – நீர்ப்பாசனத் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் இணக்கக்கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள், என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 திசெம்பர் 23 ஆந் திகதி அமைச்சு நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிக்கப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவச் செவ்வ பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பனவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 இலிருந்து 2.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

#### (அ) ஏடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணுதல்

(i) அறிக்கையிடப்பட்டுள்ளவாறு திணைக்களம் நிதிப் பிரமாணம் பிரகாரம் 272(2) இன் பிரகாரம் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்யாது 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகள் தொடர்பாக ரூபா 735,082 கூட்டு மொத்தப் பெறுமதியான 04 கொடுப்பனவு உறுதிச் சான்றுகளை காணாமால் ஆக்கியிருந்தது.

(ii) கொழும்பு நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் 2011 ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட ரூபா 175,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்ட வேலையாட்களின் 02 சம்பளப் பட்டியலும் கம்பஹ நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தினால் வழங்கப்பட்ட நிரந்தர வேலையாட்கள் 50 சம்பளப் பட்டியல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையின் காரணமாக வேலையாட்களின் சம்பளக்கொடுப்பனவுகளை திருப்திகரமாகச் சான்றுறுதி செய்யமுடியாதீருந்தது.

(iii) திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட ஒரு கணக்காய்வு ஐயவினாவிற்கு 2013 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையும் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அக்கணக்காய்வு ஐய வினாவிற்குரிய கணிப்பிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 6,735,771,646 ஆகும்.

**(ஆ) பாதீட்டு முரண்**

(i) 03 மூலதன செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 450,000,000 கூட்டுமொத்தமான மூலதன ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 24 செலவு விடயங்களுக்காக மிகையாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அச்செலவு விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 25 சதவீதத்திற்கும் 96 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சுடைய அளவில் காணப்பட்டது.

(iii) 03 அமைச்சுக்களிடமிருந்தும் ஒரு திணைக்களத்திடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 1,358,685,798 தொகையான ஏற்பாடுகளில் ரூபா 1,035,122,943 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 323,562,855 தொகையான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருக்கவில்லை. அது பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த நிதி ஏற்பாட்டில் 24 சதவீதமாக இருந்தது.

**(இ) பொதுவைப்புக் கணக்கு**

(i) 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 53,464,992 தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப்பிரமாணம் 571 (1) இன் பிரகரம் ஒவ்வொரு அரையாண்டு இறுதியிலும் காலம் கடந்த அனைத்து வைப்புக்கள் தொடர்பான பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

22801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2012 திசெம்பர் 31 ஆந் திகதிய இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 18,620,869 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இடமாற்றம் பெற்றுச் சென்ற 4 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 453,964 தொகை அறவிடப்படவேண்டியிருந்தது. 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் மாகாண சபை அலுவலகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து கடன் தொகையானது தவணைப் பணமாக அறவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 203,480 தொகை இன்னும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாடு சென்ற 3 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 151,615 அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் இதில் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 146,240 தொகை 17 ஆண்டுகளாகவும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 5,375 தொகை 11 ஆண்டுகளாகவும் நிலுவையாகக் காணப்பட்டது. நிர்வாகரீதியான பலவீனத்தின் அடிப்படையில் இக்கடன்பட்டோர்களிடமிருந்து கடனை அறவிட முடியாதிருந்ததுடன் கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையிலும் இது தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் அக்கடன் மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

(iii) மரமடைந்த மற்றும் ஓய்வுபெற்ற 195 உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 15.128,707 கடன் மீதியொன்று 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவீடு நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. கடன் மீதியைத் தீர்த்துவைப்பதற்கு உரிய ஓய்வூதிய பணிக்கொடை போதியதாக இல்லாமை, ஓய்வூதியக் கோவைகளிலுள்ள குறைபாடுகள் என்பவற்றின் காரணமாக ஓய்வூதியங்களைத் தயாரிக்க முடியாமை. ஆரசாங்க இல்லங்களை ஒப்படைக்காமை, ஒழுக்காற்றுச் சோதனைகள் பூர்த்தியடையாமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் இம்மீதிகளைத் தீர்த்துவைத்தல் தாமதமடைந்திருந்தது.

(iv) வேலையிலிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட 13 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 653,893 தொகையான கடன் அறவிடவேண்டியிருந்ததுடன் அக்கடன் மீதி 20 ஆண்டுகள் பழமையான கடன் மீதியாகக் காணப்பட்டது. வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்படடதற்கான காரணத்தை அறிந்து அந்த உத்தியோகத்திரிடமிருந்து அறவிடவேண்டிய கடன் மீதிகளை அறவிடுவதற்கு நிறுவனத்டதினால் நடவடிக்கை எடுக்கப்படாததன் அடிப்படையில் இக்கடன் மீதிகள் நீண்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டன.

(v) சேவையை விட்டுச் சென்ற 37 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 1,838,694 தொகையான கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டியிருந்தன. அவற்றிற்கு மத்தியில் 17 ஆண்டுகளான நீண்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்ட கடன் மீதிகளும் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இக்கடன்பட்டோர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய கடன் மீதிகளை அறவீடுசெய்வதற்கு திணைக்களத்தினால் உரிய காலத்தில் நடவடிக்கை

எடுக்கப்படாமை இக்கடன் மீதிகள் நீண்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டமைக்கு காரணமாக இருந்தது.

**2.4 நல்லாட்சியும் கணக்களிதன்மையும்**

**2.4.1 கூட்டிணைந்த திட்டம்**

அனைத்து அமைச்சு செயலாளர்கள், மாகாண சபை பிரதான செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலாளர்கள், மாகாண உள்ளூராட்சி தலைவர்கள் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்காலத்தில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் மாவட்ட செயலகத்தினால் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபத்தின் பிராகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 மார்ச் 08 ஆந் திகதியே தயாரிக்கப்பட்டிருந்தது.

**2.4.3 உள்ளகக் கணக்காய்வு**

2012 ஆம் ஆண்டின் போது 20 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்படடிருந்த போதிலும் அவற்றில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகளை சரிசெய்து கொள்வதற்கான ஆக்கபூர்வமான முறைமைகள் நிறுவனத்தில் காணப்படவில்லை.

**2.4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமுல்படுத்துதல்**

திறைசேரி செயலாளரின் 2000 யூன் 12 ஆந் திகதிய ஐஏஜ/2000/1 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 01 ஆம் பந்தியின பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மூன்று குழுக் கூட்டங்கன் மாத்திரம் நடைபெற்றிருந்தன.

**2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

**(i) இயந்திரங்கள்**

மீள் எழுச்சி செயற்திட்டத்தின் மூலம் கல்முனை நீர்ப்பாசன பொறியியல் அலுவலகத்தின் கரவாகு செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 12,000,000 பெறுமதியான SR70 வகையைச் சார்ந்த ஒரு எக்ஸ்வேட்டரும்

ஒரு பாஜ்ஜூம் 2010 ஆம் ஆண்டின் போது தற்காலிகமாக கம்பஹ நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் விபத்துக்குள்ளாகியதன் காரணமாக 2011 மார்ச் 23 ஆந் திகதியிலிருந்து பயன்படுத்தாது காணப்பட்டது.

(ii) **வீடுகள்**

---------------

2012 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் திணைக்களத்திற்குச் சொந்தமான 310 அரசாங்க வீடுகளில் குடியிருப்பதற்கு உத்தியோகத்தர்கள் முன்வராமை, அவை சேதமடைந்து காணப்பட்டமை ஆகிய காரணங்களினால் நீண்டகாலாமாக பயன்படுத்தாது காணப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்**

----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/எப்எஸ்/மீளாய்வுச் சபை/01 ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தின் 10 நீர்ப்பாசன அலுவலகங்களால் பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாகவும் ஏனைய சிபார்சுகள் தொடர்பாகவும் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மேலே (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட 10 அலுவலகங்களில் அனுராதபுரம் மற்றும் கண்டி வலய இரண்டு நீர்ப்பாசன அலுவலகங்களிலும் மற்றும் அம்பாறை, இரத்மலானை ஆகிய இரண்டு இயந்திரப் பொறியியலாளர் வேலைத்தளங்களிலும் 2011 ஆம் ஆண்டின் போதும் பொருள் மெய்மையாய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

----------------------------------------------------------------------------------------------------

(i) 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தவாறு திணைக்களத்திற்குச் சொந்தமான 21 உத்தியோகபூர்வ இல்லங்களில் அத்துமீறிக்

குடியிருப்பவர்கள் தொடர்பாக சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி எடுக்கப்படவில்லை.

(ii) 54 உத்தியோகபூர்வ இல்லங்கள் அரசாங்கத்தின் ஏனைய திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தமை 2012 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

**(ஈ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

நீர்ப்பாசன மற்றும் நீர்லழங்கள் முகாமைத்துவ அமைச்சு, மஹாவலி அதிகார சபை மற்றும் மற்றும் அம்பாறை மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான 11 வாகனங்கள் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்ததாக 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் உள்ளகக் கணக்காய்வு ஐய வனாக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**(உ) தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள்**

(i) திணைக்களத்தினால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்ப்படாத பொறுப்புக்கள் ரூபா 1.220,829,266 ஆக இருந்ததுடன் அம்மீதி ஒரு ஆண்டினைவிடக் குறைந்த காலப்பகுதிக்குரியவையாகும்.

(ii) நிதிப்பிரமாணம் 94 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் செலவுகளின் அளவுகள் எச்சந்தர்ப்பத்திலும் நிதி ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டினை மிகைக்கக் கூடாது என்ற போதிலும் 8 செலவு விடயங்களின் தேறிய நிதி ஏற்பாட்டிற்கு மிகையாக ரூபா 307,968,770 தொகையான நிதி ஏற்பாடட்டிற்கு கடப்பாடு செய்யப்பட்டிருந்தது.

## 2.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| | ------------------------------ | --------------- <br> ரூபா | ------------------------------- |
| (அ) | இலங்கை சனநாயகக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) | நிதிப் பிரமாணம் 104 | 2,398,474 | கம்பஹா நீர்ப்பாசன பொறியியளாலர் அலுவலகத்தின் SR70 ஆம் இலக்க கொபெல்கோ வகையைச் சார்ந்த எக்ஸவேட்டர் 2011 மார்ச் 23 ஆந் திகதி விபத்திற்கு உள்ளாகியிருந்த போதிலும் அது தொடர்பாக 03 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முழுமையான அறிக்கை 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 135 | 131,456 | காலி நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தினதும் மாத்தறை நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தினதும் ரூபா 131,456 தொகையான கொடுப்பனவுகளை அங்கீகரித்தல், சான்றுபடுத்துதல், கொடுப்பனவு செய்தல் ஆகிய அனைத்து கொடுப்பனவுகளும் ஒரே உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (iii) | நிதிப் பிரமாணம் 139(4) மற்றும் நிதிப் பிரமாணம் 264(1) | 1,680,562,489 | காலி வலய பணிப்பாளர் அலுவலகத்தின், கிங் கங்கை நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தின் மற்றும் தலைமை அலுவலகத்தின் கணக்குக ளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்காக பற்றுச்சீட்டுக்கள் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | நிதிப் பிரமாணம் 156(5) | - | தலைமை அலுவலகத்தின் மற்றும் கொழும்பு வலய நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தின் கடன் பதிவேட்டில் மற்றும் ஒதுக்கீட்டுப் பேரேட்டில் அழிக்கும் மையைப் பயன்படுத்தி மாற்றம் செய்தல், தெளிவற்ற வகையில் எழுதுதல், அதிகாரமின்றி மாற்றம் செய்தல் முதலிய தவறுகள் இடம்பெற்றிருந்தன. |
| (v) | நிதிப் பிரமாணம் 267(1) | 885,345 | காலி வலய நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் தமது வங்கிக் கணக்கிற்கு ரூபா 885,.345 தொகையான சம்பளத்தைப் பெற்றுக்கொண்ட 45 உத்தியோகத்தர்களினால் சம்பளப் பட்டியலில் கையொப்பமிட்டிருக்கவில்லை. |
| (vi) | நிதிப் பிரமாணம் 316(2) | - | கம்பஹா நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தின் பாதுகாப்பு பெட்டியில் வைக்கப்பட்ட பணம் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. |
| (vii) | நிதிப் பிரமாணம் 447(4) | 1,220,829,266 | அனைத்து பொறுப்புக்களும் செலவுப் பேரேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) பொது நிர்வாகச் சுற்றுநிருபம்

---

| | | | |
|---|---|---|---|
| (i) | 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 04 ஆம் பந்தி | 987,511 | 12 உத்தியோகத்தர்களின் ரூபா 987,511 தொகையான எரிபொருள் படியை மீளளிப்புச் செய்வதற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 03 ஆம் பந்தி | - | சில வலய மற்றும் நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்திற்கு விரல் அடையாளமிடும் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. |

(இ) திறைசேரி சுற்றுநிருபம்

| | | |
|---|---|---|
| (i) 2012 ஒக்டோபர் 08 ஆந் திகதிய BD/A/AO/BC ஆம் இலக்க சுற்றுநிருபம் | 985,546 | எரிபொருள் படிகள் மற்றும் போக்குவரத்துப் படிகளைப் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்கள் உரிய செயற்பாடுகளுக்கு அவை பயன்படுத்தப்பட்டனவா என்பதனை 03 மாதங்களுக்கு ஒரு தடவை உள்ளகக் கணக்காய்வுப் பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்துதல் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ii) 2012 நவம்பர் 20 ஆந் திகதிய 05/ 2012 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றுநிருபம் | 212,260 | 2012 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் குாசேட்டை மூடி மிகுதியாகவுள்ள காசு மீதி வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் 5 வலய நீர்ப் பாசனப் பணிப்பானர் அலுவலகங்களின் காசேடுகள் மூடப்பட்டு மீதி வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருக்க வில்லை. |

(ஈ) தேசிய பாதீட்டுச் சுற்றுநிருபம்

| | | |
|---|---|---|
| 2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 2.5 ஆம் பந்தி | - | உத்தேச சேமிப்புக்களை உள்ளடக்கும் வகையில் ஒரு திருத்திய பாதீடு தயாரிக்கப்ப ட்டிருக்கவில்லை. |

(உ) நீர்ப் பாசனத் திணைக்களச் சுற்றுநிருபம்

| | | |
|---|---|---|
| 2012 பெப்ரவரி 06 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க நீர்ப்பாசன திணைக்களத்தின் நிதி அதிகாரங்களை ஒப்படைத்தல் சுற்றுநிருபம் | 5,465,888,892 | தலைமை அலுவலகத்தில் கட்டு நிதி கொடுப்பனவு வவுச்சர்கள் பிரதி நிதிப் பணிப்பாளரினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2.7 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் பலவீனங்கள்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல், செயற்திட்டங்களை பூர்த்திசெய்யாது கைவிடுதல் மற்றும் செயற்திட்டங்களில் தாமதங்கள் என்பன தொடர்பாக கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் வெளிப்படுத்தப்பட்ட சந்'தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்

திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவில்லை என உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் வெளிப்படுத்தபட்டது.

| | செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | உடன்படிக்கை திகதி | ஆரம்பிக்காமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| **திருகோணமலை வலயம்** | | | | |
| (i) | SS/MD/26/2012 மஹாவெலி வெள்ள அணையின் திருப்பு முனையை மேம்படுத்துதல் | 65,000 | 12.03.2012 | ஒப்பந்தகாரர்கள் அவ்வேலையைச் செய்ய முன்வராமை |
| (ii) | SS/MD/35/2012 தங்கத்துரை இடதுகரைக் கால்வாய் பிரதான கால்வாயின் 06 விநியோக கால்வாய்களில் ரெகுலேட்டர்களைத் திருத்தம் செய்தல். | 55,000 | 24.04.2012 | வேலையைப் பொறுப்பேற்ற விவசாய அமைப்புக்களால் வேலையை ஆரம்பிக்காமை. |
| (iii) | RAP/PPMUCE/CBO/ RD/I(A)/02/2011 IBMC-D-6 கால்வாயில் மீற்றர் 2090 ஆவது இடத்தில் அணை ஒன்றை நிர்மாணித்தல் | 484,000 | 27.08.2011 | அதிக மழை மற்றும் அடிக்கடி கால்வாயில் அதிகரிக்கும் நீர் என்பவற்றின் காரணமாக அவ்வேலை விவசாய அமைப்பினால் நிறுத்தி வைக்கப்பட்டது. |

**(அ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

திணைக்களத்தரினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு | பூர்த்திசெய்யப்பட வேண்டிய ஆண்டு | 2012 திசெம்பர் 31 இல் செலவு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | | | ரூபா மில்லியன் | |
| யான் ஓயா | 8,700 | 2007 | 2012 | 09 | சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை அங்கீகரிக்கப்படாமை |
| பகல ஊவ நீர்த்தேக்கம் | 550 | 2005 | 2012 | 182 | பாதீட்டு நிதி ஏற்பாட்டைக் குறைத்தல், கட்டு நிதி போதியதாக இல்லாமை, சீரற்ற காலநிலை என்பன. |
| மஹாகோனாவெவ | 169 | 2008 | 2017 | 0.5 | சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைக்கு அங்கீகாரம் தாமதித்தமை. |
| கல்ஓயா நவோதய | 1,260 | 2009 | 2012 | 416 | கட்டு நிதி போதியதாக இல்லாமை |
| மொறான நீர்த்தேக்கம் | 1,700 | 2012 | 2020 | 5 | சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை தாமதமடைதல், காணிச் சுவீகரிப்பில் தாமதம் |
| எல்ல குளம் | 467 | 2012 | 2013 | இல்லை | பாதீட்டு நிதி ஏற்பாட்டைக் குறைத்தல், சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை தாமதமடைதல் என்பன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தீகிலி ஓயா | 1.460 | 2012 | 2014 | இல்லை | பாதீட்டு நிதி ஏற்பாட்டைக் குறைத்தல், சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை தாமதமடைதல் என்பன. |
| களுகல் ஓயா | 1,481 | 2012 | 2015 | 2 | பாதீட்டு நிதி ஏற்பாட்டைக் குறைத்தல், சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை தாமதமடைதல் என்பன. |
| கும்புக்கன் ஓயா | 10,000 | 2012 | 2013 | இல்லை | பாதீட்டு நிதி ஏற்பாட்டைக் குறைத்தல், சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை தாமதமடைதல் என்பன. |
| குருகல் ஓயா | 400 | 2009 | 2012 | 218 | கட்டுநிதி போதியளவில் கிடைக்காமை மற்றும் அதிக மழை |
| நாபஉட நீர் | 40 | 2007 | 2012 | 5 | சீரற்ற காலநிலையின் அடிப்படையில் மண் வேலை செய்யமுடியாமை. |
| விலகண்டிய | 81 | 2011 | 2012 | 15 | சீரற்ற காலநிலையின் அடிப்படையில் மண் வேலை செய்யமுடியாமை. |
| கோனகலதென்ன | 55 | 2012 | 2013 | 0.5 | சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைக்கான அங்கீகாரம் தாமதமடைதல் |
| சம்புத்த ஜயந்தி குளத்தின் வான் கதவுகளுக்கு அருகாமையில் பெட்டி மதகு நிர்மாணித்தல் | 1.2 | 2011 | 2012 | இல்லை | அதிக மழையுடனான காலநிலை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மல்கம்பிட்டி அணைச் செயற்திட்டத்தின் கீழ் ஆற்றுப் பக்கத்தில் வெள்ளப்பாதிப்பை திருத்துதல் | 1.9 | 2011 | 2012 | இல்லை | சமர்ப்பிக்கப்படவில்லை. |
| செங்கபாடை ஆற்றின் இடது பக்க தொடக்க அணையில் 3+305 கி. மீற்றரிலிருந்து 3+350 கி. மீற்றர் வரை மற்றும் 6+850 கி. மீற்றரிலிருந்து 6+850 கி. மீற்றர் வரை கெபியன் பெட்டி நிர்மாணித்தல் | 3.0 | 2011 | 2012 | இல்லை | செங்கபாடை ஆற்றின் மூடப்படாத நீர் பாய்வதனை நிறுத்தாமையின் காரணமாக மற்றும் 2012/ 2013 பெரும் போகத்திற்கு நீர் வழங்கும் நடவடிக்கையின் காரணமாக |
| Construction of current meter station at structure 27+180 K.m in RBMC on Illukuchenai Unit | 0.9 | 2012 | 2012 | இல்லை | வெள்ள பிரதான கால்வாயில் நீர் பாய்ந் தோடுவதன் காரணமாக. |

**2.8 வங்கி கணக்குகளின் செயற்பாடுகளில் குறைபாடுகள்**

2012 நவம்பர் 26 ஆந் திகதிய 227/2012 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றுநிருபத்தின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத்தின் 10 வங்கி கணக்குகளுக்குரிய விபரம் 2012 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுக் கணக்கின் வங்கி கணக்குகள் தொடர்பான நிலைப்பாட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**2.9 சச்சரவுத்தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்**

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் சச்சரவுத்தன்மை வாய்ந்ததாக இருந்தன. தெரிவுச் செவ்வையின் போது அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

(அ) அரசாங்க இல்லங்கள் மற்றும் சலுகை அடிப்படையிலான பருவகாலச் சீட்டுக்கள் வழங்குதல்

சலுகை அடிப்படையிலான பருவகாலச் சீட்டு வசதிகளைப் பெற்றுக் கொண்டு வாத்துவ, காலி, ஹிக்கடுவ, வெலிகம, வெயன்கொட, பொதுஹெர ஆகிய பிரதேசங்களிலிருந்து கொழும்பு தலைமை அலுவலகத்திற்கு சேவைக்காக சமூகமளிக்கும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு இரத்மலானை தொடர் வீடுகளிலிருந்து எட்டு வீடுகளும் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) அளவீட்டு உபகரணங்களின் பற்றாக்குறை

ஜலசக்திப் பிரிவில் சேவையாற்றி 2002 மே 09 ஆந் திகதி கட்டாய ஓய்வினைப் பெற்றுக் கொண்ட கஞ்சியப் பொறுப்பாளரின் 2002 ஆம் ஆண்டிற்கு முன்னைய சேவைக் காலத்தின் போது இடம்பெற்றிருந்த அளவீட்டு உபகரண பற்றாக்குறையின் பெறுமதி ரூபா 8,010,875 ஆக அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் ரூபா 411,051 தொகை அவரிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பரிசோதனையை நடாத்துவதற்காக நிதிப் பிரமாணம் 104(1)(அ) பந்தியின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் விசாரணைச் சபை நியமிக்கப்பட்டிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முழுமையான அறிக்கையையும் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது. 2013 மார்ச் 07 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த விசாரணை அறிக்கையின் பிரகாரம் இந்நட்டம் ரூபா 4,313,239 வரை குறைக்கப்பட்டிருந்தது. 10 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றிருந்த இந்நட்டத்தை சரியாக கணிப்பிட முடியாமை மற்றும் அப்பற்றாக் குறையை அறவிடுவது தொடர்பாக உரிய பின் தொடர் நடவடிக்கை எடுக்காமை சச்சரவுத் தன்மைக்குரிய விடயமாக அவதானிக்கப்பட்டது.

## 2.10 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) 541 நீர்ப்பாசன நட்டங்கள் மற்றும் சேதங்களில் பெறுமதி மதிப்பிடப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்களின் எண்ணிக்கை 445 ஆக இருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 69,679,695 ஆக இருந்தது. அதில் ரூபா 52,975,313 தொகைக்குரிய நட்டங்கள் மற்றும் சேதங்கள் 05 ஆண்டுகளுக்கு மேல் காலம் கடந்தவையாக இருந்த போதிலும் அவை தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வாகன விபத்துக்கள் மற்றும் 96 களஞ்சியப் பொருள் பற்றாக்குறைகளுக்குரிய நட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதில் 84 விபத்துக்கள் ஐந்து ஆண்டுகளை விட பழைமை வாய்ந்தாக இருந்ததுடன் 20 ஆண்டுகளுக்கு மேல் காலங்கடந்திருந்த வாகன விபத்துக்கள் மற்றும் பொருள் பற்றாக்குறைகளின் எண்ணிக்கை 70 ஆக இருந்தது.

## 2.11 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகள் அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவினால் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் உருவாகிய விடயங்கள் தொடர்பாக குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகளை அதிகாரிகளால் அமுல்படுத்தும் போது தாமதத் தன்மை வெளிப்படுத்தப்பட்டது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் | அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுக் கூட்டத் திகதி | குழுவின் சிபார்சு |
|---|---|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | | | |
| - | - | சுகலாதேவி குளச் செயற்திட்டத்தின் கீழ் பொறியியல் உதவியாளர் ஒருவர் மேற்கொண்ட ஒழுங்கீனம் | 2011.07.07 | உத்தியோகத்தருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் |
| - | - | வெலிஓயா செயற்திட்டத்தின் கீழ் இடம்பெற்ற ஒழுங்கீனம் | 2011.07.07 | உத்தியோகத்தருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் |
| 2006 | 2.4.1 | போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து ஆதனக் கடன் பெற்றுக்கொள்ளல் | 2011.07.07 | உத்தியோகத்தருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் |
| 2006 | 7.2(அ) | வேஹெரகல செயற்திட்டத்திற்காக கொங்கிரீட் கலவை இயந்திரம் கொள்வனவு செய்தல் | 2011.07.07 | தோழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளல், விநியோகத்தருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் |
| 2008 | 7(இ)(i) | ஒரு வாகனம் விபத்துக்குள்ளாகி ரூபா 210,000 தொகையான நட்டம் ஏற்பட்டமை. | 2011.07.07 | நுட்டத்தை சாரதியிடமிருந்து அறவிடல். |

(ஆ) கம்பஹா நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தின் 30 சம்பளத் திரட்டுக்களில் குறிப்பிட்ட செயற்பாடுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 1,248,729 தொகையில் ரூபா 613,817 தொகை செலவு செய்யப்படாது சேமிக்கப்பட்டிருந்ததுடன் இதற்கான காரணம் உத்தேச செயற்பாடு உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாமையா மதிப்பீடு செய்தல் பலவீனமா என்பது கணக்காய்விற்குத் தெளிவுபடுத்தப்படவில்லை.

(இ) 1946 இன் 32 ஆம் இலக்க நீர்ப்பாசன கட்டளைச் சட்டம் மற்றும் அடிக்கடி அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் நிகழ்காலத்திற்குப் பொருந்தும் வகையில் திருத்தங்கள் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) தீகிலிய நீர்த் தேக்கம், எல்லவெவ நீர்த் தேக்கம், கும்புக்கன் ஓயா நீர்த் தேக்கம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக 3 செலவு விடயங்களின் கீழ் ரூபா 570 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்படம்டிருந்த போதிலும் அடிப்படைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாததன் காரணமாக அச்செயற்திட்டங்கள் தொடர்பாக எதுவித செலவும் செய்யாது அந்நிதி ஏற்பாட்டில் ரூபா 120 மில்லியன் ஏனைய செயற்திட்டங்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

(உ) 8 செலவு விடயங்களின் கீழ் ரூபா 3,418.6 மில்லியன் நிதி ஏற்பாட்டிற்கு ஏனைய செலவு விடயங்களிலிருந்து ரூபா 1,629.5 மில்லியன் மாற்றப்பட்டிருந்ததுடன் அம்மாற்றல் பத்திரங்களில் குறிப்பிட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 946.2 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நீர்ப்பாசனத் திணைக்கள நிதி ஏற்பாட்டுகளிலிருந்து ஏனைய 9 அரசாங்க நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட ரூபா 424,806,089 தொகையான நிதி ஏற்பாடுகளில் ரூபா 283,073,921 தொகை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 141,733,068 தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.12 மனிதவளங்கள் முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான் பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 410 | 267 | 143 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 180 | 38 | 142 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 2,380 | 1,609 | 771 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 2,466 | 1,431 | 1,035 |
| | மொத்தம் | 5,436* | 3,345 | 2,091 |

* கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்ட எண்ணிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இந்த உள்ளபடியான பதவியணியினணக்கு மேலதிகமாக ஒப்பந்த அடிப்படையில் பல்வேறு செயற்பாடுகளில் 211 பதவியணியினர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையிலும் ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார்கள். இது தொடர்பான சரியான எண்ணிக்கை ரீதியான தகவல்கள் திணைக்களத்தடம் காணப்படவில்லை.

(ii) மீளாய்வாண்டின் இறுதியளவில் காணப்பட்ட 2,091 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை.

(iii) நிரந்தர அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 5,436 ஆக கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது 4,468 ஆக 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது. 968 ஆன வித்தியாசத்திற்கான காரணம் தெளிவுபடுத்தப்படவில்லை.

**(ஆ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது ஏனைய தரப்பினர்களுக்கு முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்ட மனித வளங்கள் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| பதவியணியினர் வகை | பதவியணியினர் எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | விடுவிக்கப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|
| நீர்ப்பாசன பொறியியலாளர் | 05 | நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | குறிப்பிடப்படவில்லை |
| பொறியியல் உதவியாளர் | 01 | நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 2011 ஏப்ரல் முதல் |
| திட்டமிடல் தொழில்நுட்பவியலாளர் | 01 | நீர்ப்பாசன மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 2008 சனவரி முதல் |
| திட்டமிடல் தொழில்நுட்பவியலாளர் | 01 | சனாதிபதி புலனாய்வுப் பிரிவு | 2005 மார்ச் முதல் |
| திட்டமிடல் தொழில்நுட்பவியலாளர் | 01 | சனாதிபதி புலனாய்வுப் பிரிவு | 2002 செப்டெம்பர் வரை |
| விஸ்தரிப்பு உதவியாளர் | 01 | சனாதிபதி புலனாய்வுப் பிரிவு | 2001 மே முதல் |
| விஸ்தரிப்பு உதவியாளர் | 01 | சனாதிபதி புலனாய்வுப் பிரிவு | 2005 மார்ச் முதல் |
| பொறியியல் உதவியாளர் | 03 | மஹாவெலி அதிகாரசபை | 2012 மார்ச் முதல் ஒரு ஆண்டிற்கு |